**தெற்கு அதிவேக பாதை விரிவாக்கல் செயற்திட்டம் - பகுதி I - 2019**

தெற்கு அதிவேக பாதை விரிவாக்கல் செயற்திட்டம் - பகுதி I இன் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், நெடுஞ்சாலைகள் அமைச்சு கருத்திட்ட நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. அம்பாந்தோட்ட சர்வதேச மைய அபிவிருத்தி நடவடிக்கைக்கு ஆதரவளித்தல் மற்றும் ஊக்கப்படுத்தலிற்கு வீதி வலையமைப்பின் அபிவிருத்தி செய்தல் செயற்திட்டத்தின் பிரதான நோக்கமாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 103,280 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 804.11 மில்லியன் ஆக உள்ளதுடன் அதில் ரூபா 87,788 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 683.49 மில்லியன் சீனாவின் ஏற்றுமதி இறக்குமதி வங்கியால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. மீதித் தொகை ரூபா 15,492 மில்லியன் இலங்கை அரசாங்கத்தினால் வழங்க எதிர்பார்க்கப்பட்டிருந்தது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2016 சனவரி 19 இல் தொடங்கியிருந்ததுடன் 2019 ஜூலை 18 இல் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது.

**1.3 அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து, செயற் திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில், கருத்திட்டத்தின் தொடர்ந்தியங்கும் ஆற்றலினை மதிப்பீடு செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். கருத்திட்டத்தினை கணக்கொழிப்பதற்கு முகாமைத்துவம் கருதுமாயின் அல்லது மாற்றீடு இல்லாதவிடத்து செயற்பாடுகளை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தாலேயொழிய தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கருவின் அடிப்படையில் கணக்குகளை பேணுதல் மற்றும் கருத்திட்டத்தின் தொடர்ந்தியங்குவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்தல் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

கருத்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

கருத்திட்டத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக ஏடுகளும் அறிக்கைகளும் பேணப்படுதல் அவசியமாகும்.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கருத்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.
- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல | கணக்கீட்டுக் குறைபாடுகள் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் இல.08 இற்கு முரணாக, 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணி சுவீகரிப்பு மீது செலுத்த வேண்டிய தாமத வட்டிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் குறைமதிப்பீடு. | உடன்பட்டனர். | உரிய ஏற்பாடு இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் இல.08 இன் பிரகாரம் செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | ஒப்பந்ததாரர் ஒப்பந்ததாரரின் கொடுப்பனவில் தாமதத்தின் மீதான வட்டியாக ரூபா 71.84 மில்லியன் தொகை மற்றும் ஐ.அ.டொலர் 3.9 மில்லியனை கோரியிருந்தார். இருப்பினும், ரூபா 608.66 மில்லியன் தொகையான கணிப்பிடப்பட்ட தாமத வட்டி நிதிக்கூற்றுக்களில் அங்கீகரிக்கப்பட அல்லது வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் குறைமதிப்பீடு. | உடன்பட்டனர். | இலங்கை பொதுத்தறை கணக்கீட்டு நியமங்கள் இல்.08 இன் பிரகாரம் உரிய நிகழத்தக்க பொறுப்புக்களை நிதிக்கூற்றுக்களில் அங்கீகரிக்க அல்லது வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3 பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்றிட்ட செயற்பாடுகளின் பௌதீக செயலாற்றல்

| கணக்காய்வாளரின் கருத்து மற்றும் அவதானிப்புக்கள் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- |
| குறைபாட்டு வெளிப்படுத்தல் காலம் மற்றும் கடனின் செல்லுபடியாகும் காலம் என்பன முறையே 2020 நவம்பர் 08 மற்றும் 2020 ஒக்டொபர் 25 இல் காலாவதியாகியிருந்தும், செயற்திட்டமானது சாத்தியவள கற்கை அறிக்கையில் ஓர் இடமாறலாக அமைப்பதற்கான ஓர் இடமாக அடையாளப்படுத்தப்பட்டிராத கபுடுவவில் ஓர் பகுதி சார் இடமாறலை தீர்மானிப்பதற்கு ஆரம்பித்திருந்தது. ரூபா 459.8 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்துடனான நிர்மான வேண்டுகோள் கணக்காய்வு திகதி 2021 பெப்ரவரி 03 வரை பொறியியலாளர்களினால் அனுமதிக்கப்பட்டிறாததுடன் நிர்மானம் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளரினால் 2020 நவம்பர் 10 இல் நடாத்தப்பட்ட கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் ஆரம்பிக்கப்பட்டுமிருந்நது. | உண்மையான ஒப்பந்தகிரயம் நிறைவேற்றப்பட்ட கிரயத்துடன் குறைவாக இருக்க முடிந்ததுடன் பிந்திய திட்டமிடல் ஒப்பந்தத்தின் கிரயத்தினை அதிகரிக்க கூடும். | கபுதுவ பகுதிசார் இடமாறலின் நிர்மான வேலைகள் 2021 ஏப்ரல் மாத ஆரம்ப வாரத்தில் பூர்த்திசெய்யப்பட்டிருந் தது. இவ்வேலை கையேற்பு பத்திரத்தினை வழங்கும் நேரத்தில் ஓர் மிகுதி வேலையாக அடயாளப்படுத்தப்பட்டி ருந்தது. | எதிர்கால திட்டமிடல் அனைத்து எதிர்பார்ப்புக்களையும் கவனத்தில் கொண்டு குறைந்த செலவில் பொதுமக்களிற்கு சிறந்த வெளியீட்டினை வழங்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| இல | கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- | --- |
| (அ) | எவ்வித பீஓகியுவ் ஏற்பாடுகளும் தேவைப்பிரிவின் நிர்மானத்திற்காக செய்யப்பட்டிருந்தும், இரண்டு காணிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. மேலும், தெற்கு அதிவேகப்பாதையின் 46 கி.மீஇன் பின்னர் அதிவேகப்பாதையின் பயன்பாட்டாளர்களிற்கு எவ்வித சேவைப்பிரிவும் காணப்படவில்லை. எனவே, ஹம்பாந்தோட்டை தொடக்கம் வெலிப்பன வரை 173 கி.மீ கள் அவர்கள் பயனிக்கும் போது பொது மக்களிற்கு சேவை வழங்குவது கேள்விக்குறியாகும். | வெலிப்பன தொடக்கம் ஹம்பாந்தோட்டை வரையான 176 கி.மீகள் பயனிக்கும் பயனாலிகளிற்கு சேவைகள் வழங்குவது ஓர் பிரச்சினைகுறிய நிலையிலுள்ளது. | தேவையான உள்ளீடுகள் ஈஎஸ்ஈபி 1 இன் ஒப்பந்த பீஓகியுவ் இல் உள்ளடக்கப்பட்டிருக்கவி ல்லை. எனவே, சேவை பிரிவின் நிர்மானம் வேரான நிதி உடன்படிக்கையின் கீழ் அமுல்படுத்த வேண்டியுள்ளது. | தேவையான ஏற்பாடுகள் தெற்கு அதிவேகப்பாதை விஸ்தரிப்பு செயற்திட்டத்திற்கான வேலை பிரிவுகளை நிர்மானிக்க ஏற்பாடு செய்யப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 248,419m$^3$ அளவான மேலதிக மண் செயற்திட்டத்தின் நிர்மானங்களில் இறுதியில் சேவை பிரிவில் சேமிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. எனவே, செயற்திட்டத்திற்காக அல்லது வீதி அபிவிருத்தி அதிகார சபை அதற்கு அருகிலுள்ள பகுதிகளில் அமுல்படுத்தப்படும் எதிர்கால செயற்திட்டங்களிற்கு இம் மண்ணை பயன்படுத்த எதிர்பார்த்திருந்தது. | மண்னை முறைகேடாக பயன்படுத்தக்கூடிய சாத்தியம். | இம்மேலதிக மண் அளவு ஆர்ஓடபல்யூ விற்குள்ளான ஹடமன்ன பகுதியில் குவியலாக கையுருப்பில் காணப்பட்டது. வீதி அபிவிருத்தி அதிகார சபை அதற்கு அருகிலுள்ள பகுதிகளில் அமுல்படுத்தப்படும் எதிர்கால செயற்திட்டங்களிற்கு அம் மண்னை பயன்படுத்த எதிர்பார்த்திருந்தது. | குறித்த செயற்திட்டத்திற்கு இம் மண்ணை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | பிணக்குகள் இணக்க சபையின் தீர்மானத்தின் பிரகாரம் ஒப்ந்ததாரர் குவியல் குவாளைகளிற்கு ரூபா 16,873 அலகுக்கான விகிதத்திற்கு உரித்துடையதுடன் தரைத்தள மேம்பாட்டின் உரிய முறையின் காரணமாக இடைக்கால கொடுப்பனவு பத்திரங்கள் மீது செய்யப்பட்ட கொடுப்பனவுகளில் குறைந்த கணக்கின் மீதான வட்டி விபரமான வடிவமைப்பு கட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை அதன்படி, கூட்டு மொத்தம் ரூபா 71.26 மில்லியன் ஒப்பந்ததாரரிற்கு செலுத்தப்பட்டிருந்ததுடன் அதில் தாமத வட்டியாக செலுத்தப்பட்ட ரூபா 1.87 மில்லியன் செயற்திட்டத்திற்கு ஓர் மேலதிக செலவாகிருக்கின்றது. | செயற்திட்டத்திற்கு மேலதிக கிரயங்கள் ஏற்படும் சாத்தியம். | ஜீசீசிஇன் உபபிரிவு 20.2 இன் பிரகாரம், பிணக்குகள் இணக்கசபை செயற்திட்டத்தில் அமைக்கப்பட்டிருந்தது. அதன்படி, உரிய கொடுப்பனவுகள் டிஏபீ மற்றும் இணக்கபூர்வ தீர்ப்பனவு குழு போன்றவற்றினால் வழங்கப்பட்ட தீர்மானத்தில் கூறப்பட்ட படி ஒப்பந்ததாரரிற்கு செய்யப்பட்டிருந்தது. | சரியான தீர்மானம் தேவைற்ற கிரயங்களை குறைக்க சரியான நேரத்தில் எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | ஒப்பந்த ஆவணங்களில் தெளிவற்ற விபரணம் மற்றும் குவியல் வேலைகள் மற்றும் குவியல் வேலை அல்லாத கட்டமைப்பு கூறுகள் போன்றவற்றிற்கான காங்கிரீட் வகையுடன் தொடர்புபட்டு வழங்கப்பட்ட விபரக்குறிப்பிற்கான மாறல்களின் ஒப்பந்ததாரர்களின் பொறியியலாளர்களின் அறிவுறைகள் போன்ற காரணங்களினால் செயற்திட்டமானது ஒப்பந்ததாரரிற்கு ரூபா 129.11 மில்லியன் மேலதிகமாக செய்திருந்தது இது கிரயம் மற்றும் பிணக்குகள் இணக்க சபையின் தீர்மானத்தின் அடிப்படையிலான தாமத அல்லது மறுத்த கொடுப்பனவுகளிற்கான வட்டி என்பவற்றை அதிகரிப்பதாகவிருந்தது. | செயற்திட்டத்திற்கு மேலதிக கிரயங்கள் ஏற்படக்கூடிய சாத்தியம். | ஜீசீசிஇன் உபபிரிவு 20.2 இன் பிரகாரம், பிணக்குகள் இணக்கசபை செயற்திட்டத்தில் அமைக்கப்பட்டிருந்தது. அதன்படி, உரிய கொடுப்பனவுகள் டிஏபீ மற்றும் இணக்கபூர்வ தீர்ப்பனவு குழு போன்றவற்றினால் வழங்கப்பட்ட தீர்மானத்தில் கூறப்பட்ட படி ஒப்பந்ததாரரிற்கு செய்யப்பட்டிருந்தது. | நிபந்தனைகள் ஒப்பந்த ஆவணங்களில் தெளிவாக கூறப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (உ) | சேவையை எளிதாக்கும் கட்டிடங்கள் ரூபா 185 மில்லியன் கிரயத்தில் நிரந்தர அடிப்படையில் நிர்மானிக்கப்பட்டிருந்தும், செயற்திட்டத்தின் இறுதியில் அக்கட்டிடங்களின் எதிர்பார்க்கப்பட்ட பயனின் மீதான ஓர் ஆரம்ப திட்டம் தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் கட்டிடங்களில் எதிர்பார்க்கப்பட்ட பயன்பாடுகளிற்கான முறையான திட்டம் 2021 பெப்ரவரி 05 இலான கணக்காய்வு திகதி வரை கூட பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் கட்டிடங்களை முறைகேடாக பயன்படுத்தக்கூடிய சாத்தியம். | இரண்டு கட்டிடங்கள் மேலதிக பணிப்பாளர் (நிர்மானம்) அலுவலகத்தின் அலுவலக தாபிற்பிற்காக ஒதுக்கப்பட்டது. ஏனைய அனைத்து கட்டிடங்களும் ஆர்டிஏவின் அதிவேகப்பாதை முகாமைத்துவ பிரிவிற்கு அவர்களது அலுவலகத்தை நிறுவவும் பொலிஸ் மற்றும் விசேட அதிரடி படையினரிற்கு தங்குமிட வசதிகளை வழங்கவும் கையளிக்க வேண்டிய தேவை காணப்பட்டது. | செயற்திட்ட நடவடிக்கைகளிற்காக நிரந்தர கட்டிடங்களை நிர்மானிக்கும் போது செயற்திட்டத்தின் இறுதியில் அக்கட்டிடங்களினை பயன்படுத்துவதற்கான ஆரம்ப திட்டம் காணப்படல் வேண்டும். |
| (ஊ) | செயலாற்றல் பாதகாப்பினை வழங்குவதன் கிரயத்தினை மேற்கொள்ள ஒப்பந்தாரரினை அனுமதிப்பதனூடாக வீதி புனரமைப்பு வேலைகள் மீதான அளவைப்பட்டியல்களில் செய்யப்பட்டிருந்த வேறான கொடுப்பனவு உருப்படிகள், உரிய ஒப்பந்ததாரர்களின் கிரயத்தில் செயலாற்றல் உத்தரவாதத்தினை பெறுவதற்கான ஒப்பந்த பொது நிபந்தனையின் உபபிரவு 4.2 இன் கீழ் செய்யப்பட்ட ஏற்பாடுகளிற்கு முரணாக காணப்பட்டது அதன்படி, கூட்டு மொத்தம் ரூபா 322.8 மில்லியன் செயலாற்றல் பாதுகாப்பு பத்திரத்திற்கான செலவினை மீளப்பெற்றுக்கொள்ள ஒப்பந்ததாரரிற்கு பீஓகியுவ் பெறுமதி ரூபா 97.8 மில்லியனை மிஞ்சி 2020 ஜூலை 31 வரை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | ஒப்பந்ததாரரிற்கு தேவையற்ற நன்மைகள். | இவ் உருப்படி ஓர் கூட்டுமொத்த ஏற்பாடாக உள்ளடக்கப்பட்டிருந்தது எனவே, வேலை வழங்குனரின் கருத்து செயலாற்றல் பாதுகாப்பினை வழங்குவதன் நோக்கத்திற்கான ஓர் கொடுப்பனவினை செலுத்துவதாக இருந்தது. | அளவைகள் பட்டியலின் மதிப்பாய்வு விலைமனு ஆவணங்களை பிரசுரிப்பதற்கு முன்னர் பெறுகை நிபுணர் மற்றும் தொழிநுட்ப மதிப்பீட்டு குழுவினால் செய்யப்படல் வேண்டும். |